TAMIL NADU LEGISLATURE 9-APR 1974 MADRAS

(3) கவன ஈர்ப்பு

தேனும்பேட்டையில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Food and Revenue to a matter of urgent public importance, viz., the Fire Accident which took place at Teynampet in July 1972, resulting in loss of life and property.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சென்னையில், தியாகராயர் சாலைக்கு வடக்கிலும், அரசாங்கக் கால்வாய்க்குக் கிழக்கிலும், அண்ணா சாலைக்கு மேற்கிலும் அமைந்துள்ள குடிசைப் பகுதியில் 14—7—1972-ல் பிற்பகல் சுமார் 2-30 மணிக்குத் தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்தின் காரணமாக 158 குடிசைகள் பாதிக்கப் பட்டன. தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 372 ஆகும். இந்தத் தீ விபத்தால் சுமார் ரூ 1 லட்சம் அளவிற்கு விரயமேற்பட்டதாக மதிப்பிடப்படுகிறது. ஒரு குடிசையில் கவனிக்கப்படாமல் விடப்பட்ட எரி அடுப்பிலிருந்து கிளம்பிய தீப் பொறியினால்தான் தீ விபத்து ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தெரிய வருகிறது. மூர்த்தி என்பவரின் மகன் சுமார் 4 வயதுள்ள ராஜா என்கிற குழந்தை ஒன்று இத் தீவிபத்தில் இறந்து விட்டது. இறந்த குழந்தையின் தகப்பனருக்கு முதலமைச்சரின் பொது இடர் உதவி நிதியிலிருந்து ரூ. 500 ரொக்கப் பணம் அனுமதிக்கப்பட்டு 23—7—1972-ல் அவருக்குக் கொடுக்கப்பட்டது. தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளை மீண்டும் கட்டிக் கொள்வதற்கும், துணிகள் வாங்கிக்கொள்ளவும் அவர்களுக்கு உடனடி ரொக்க உதவித் தொகையாக ரூ. 16,840 அளிக்கப்பட்டது. இதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

தொடர் எண்.	விவரங்கள்	வழங்கப்பட்ட இடருதவித் தொகை. ரூ.
1.	குடிசைப் பகுதியிலிருந்த 154 குடிசைச் சொந்தக்காரர்களுக்கு. (குடிசையை மீண்டும் கட்டிக்கொள்வதற்கு ரூ. 60-ம், துணி மானியத்திற்கு ரூ. 20-ம் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 80 வீதம்	12,320 00

விவரங்கள்.	தொடர் எண்.	வழங்கப்பட்ட இடருதவித் தொகை.
		ரூ.
2. வேறிடத்தில் குடியிருந்த 4 குடிசைச் சொந்தக்காரர்களுக்கு (குடிசையை மீண்டும் கட்டிக்கொள்வதற்காக) ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 60 வீதம்		240 00
3. வாடகைக்குக் குடியிருப்பவர்கள் 214 பேருக்கு (துணி மானியத்திற்காக) குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 20 வீதம்		4.280 00
மொத்தம்		16,840 00

தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ளூர் உயர்நிலைப் பள்ளியில் தற்காலிக இடவசதி அளிக்கப்பட்டது. மாநகராட்சி அதிகாரிகளால் அவர்களுக்கு உணவும் அளிக்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(4) அறிக்கைகள் அளித்தல்.

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, தொழிலாளர் நல நிதிச் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 23/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, தொழிலாளர் நல நிதிச் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 23/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை பேரவையின் முன் வைத்துள்ளேன்.